# சீனப் பிரதமர் வருகை; இந்தியா மிகுந்த அக்கறை

## 'ஜா' புதுடில்லி விரைவு

(புதுடில்லி)

சீனப் பிரதமரின் இலங்கை விஜயம் குறித்து இந்தியா மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இது பற்றி விரிவான தகவல்களை பெறவும் இந்தியா முயற்சித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இம் மாதம் 17ம் திகதி மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு சீனப்பிரதமரும், வெளிநாட்டு அமைச்சரும் 10 உயர்மட்ட அதிகாரிகளும் இலங்கை வருகிறார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 கார்த்திகை 23 ஜ. அவ்வல் பிறை: 21 இதழ்: 228

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 9-12-1990

## கறுப்பு பணத்தை பெற ஸ்ரீலங்கா அரசு முயற்சி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் யுத்தத்தைத் தொடர அரசு எண்ணியிருப்பதால் யுத்தத்துக்கு வேண்டிய நிதியைக் கறுப்புப் பணம், சேமிப்புப்பணம் மூலம் பெற முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வடக்கு-கிழக்கு யுத்தம், மாணவர்களுக்கான இலவச உணவு, மாகாணசபை ஆகியவற்றிற்குச் செலவிடப்பட்ட பெருமளவு பணத்தை ஈடு செய்யவும், அரசுக்கு நிதி தேவைப்படுகிறது. போதிய நிதி இல்லாததால் வடக்கு-கிழக்கு யுத்தம் அரசுக்குப் பெரும் தலையிடியை உண்டு பண்ணுகின்றது.

(4-ம் பக்கம் பார்க்க)

### ● மாணவர்கள் உட்பட

# துறைநீலாவணையில் 76 தமிழர் ரயர் போட்டு உயிருடன் எரிப்பு

## ராணுவம், ரெலோ அட்டகாசம்

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டம் துறைநீலாவணையில் பரீட்சை எழுதச் சென்ற மாணவர்கள் உட்பட 76 தமிழர்களை இராணுவமும், ரெலோ குழுவும் சேர்ந்து கைது செய்து சித்திரவதை செய்தபின் அனைவரையும் ரயர் போட்டு உயிருடன் கொளுத்தியுள்ளனர்.**

இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது, கடந்த 6-ம், 7-ம் திகதிகளில் க. பொ. த. சாதாரண பரீட்சை எழுதச்சென்ற மாணவர்களும் பொதுமக்களுமாக 76 பேரை இராணுவமும் ரெலோ குழுவும் இணைந்து கைது செய்து முகாமிற்குக் கொண்டு சென்றது.

அங்கு அவர்கள் மிகமோசமாக சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டபின் வேறோரிடத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு

(4-ம் பக்கம் பார்க்க)

## பலாத்காரத்தின் பின் பெண்கள் கொலை

(மட்டுநகர்)

மட்டுநகரிலும், மூதூர் பகுதிகளிலும் சிங்கள இராணுவத்தினரும், ரெலோ இயக்கத்தினரும் தமிழ் பெண்களை பாலியல் வன்முறைகளில் ஈடுபடுத்திய பின்பு அவர்களைக் கொலைசெய்துவிடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

(4ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் ஊர்காவல்படைக்கு மன்னாரில் பயிற்சி முகாம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள எருக்கலம்பிட்டியில் முஸ்லிம் ஊர்காவற்படைக்கான தனியான பயிற்சி முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பயிற்சி முகாமில் 350 முஸ்லிம் இளைஞர்களுக்கு துரித ஆயுத பயிற்சி ஸ்ரீலங்கா ஆயுத படையினரால் அளிக்கப்பட்டுவருகிறது.

கடந்த நவம்பர் 25ந் திகதியிலிருந்து இந்த பயிற்சிகள் இடம்பெற்று வருகிறது. முதற்கட்ட இந்த பயிற்சி முடிந்ததும் மேலும் நூற்றுக்கணக்கானோர் 2ம் கட்ட பயிற்சிக்கு சேர்க்கப்படுவர்.

(ரி-155)

## திருமலை பச்சைநூலில் 6 தமிழர் சுட்டுக்கொலை

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் பச்சைநூல் கிராமத்தில் ஆறு அப்பாவித் தமிழர்களை நேற்று இராணுவம் சுட்டுக்கொலை செய்துள்ளது. கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் வீதிகளில் போடப்பட்டுள்ளது.

இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் இருபெண்கள், இரு குழந்தைகள், இரு ஆண்

(4-ம் பக்கம் பார்க்கம்)

## ஆறு தமிழர் கைது இருவர் சுட்டுக் கொலை

(அம்பாறை)

ஆறு பொதுமக்களைக் கைது செய்த இராணுவம் இருவரை அதேயிடத்தில் வைத்து சுட்டுக்கொலை செய்த சம்பவம் அம்பாறை மாவட்டத்தில் கடந்த வாரம் நிகழ்ந்துள்ளது.

இதுபற்றி மேலும் கூறப்

(4ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி ஆசிரியருக்கு விரைவில் இடமாற்றம்

(வட்டுக்கோட்டை)

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் பத்துவருடங்கள் சேவைசெய்த ஐம்பது வயதிற்குட்பட்ட ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யடபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பத்துவருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றிய யாழ். மாவட்ட ஆசிரியர்களின் விபரப்பட்டியல் தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன,

இந்த ஆசிரியர்களின் விபரப்பட்டியல் ஒன்றைத் தயாரித்து உடனடியாக அனுப்பி

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழக அரசை கலைக்கவே புலிகள் மீது குற்றச்சாட்டு

(சென்னை)

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனநாயக அரசை கலைக்க முயல்வது முறையற்ற ஒரு செயல் என இந்திய முன்னாள் பிரதமர் திரு. வி. பி. சிங் சென்னையில் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; தமிழக அரசை கலைக்கவே விடுதலைப் புலிகள் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு தனை முதல்வர் திரு. கருணாநிதியுடன் மத்திய அரசு சம்பந்தப்படுத்துகிறது; இலங்கை விவகாரத்தில் தேசியமுன்னணி தவறிழைத்த

(4-ம் பக்கம் பார்க்க)

## 1,536 சிங்கள ஆசிரியர்கள் வடக்கு-கிழக்கில் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் 1,536 சிங்கள பயிலுநர் ஆசிரியர்கள் ஸ்ரீலங்கா கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பயிலுநர் ஆசிரியர்களுக்கு ஏழு மாவட்டங்களில் நிமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் 20சிங்கள பயிலுநர் ஆசிரியர்களுக்கு நியமனம் கிடைத்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## உலகத் தமிழர் மாநாடு கோலாலம்பூரில் ஆரம்பம்

(புதுடில்லி)

உலகத் தமிழர்களின் முதலாவது மாநாடு கோலாலம்பூரில் எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக மூன்று

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்களை மொத்த மாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியா பாரிகளிற்கு விசேட கழிவு உண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256, பருத்தித் துறை வீதி, நல்லூர்; ''அரஸ் ஜவுளியகம்'' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி-4158)

சுத்தமான வேப்பெண் ணெய் விற்பனைக்கு உண்டு. பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை விரட்டுவதிலும், பயிர் நோய் களை அகற்றுவதிலும் வேப் பெண்ணெய் சிறந்த சாதனம் எனக்கண்டறியப்பட்டுள்ளது. போத்தல் ரூ. 80-/ மட்டுமே: மில்க்வைற், யாழ்ப்பாணம்.

(ஏ-919)

### புதிய உலகம்

வெளிவந்து விட்டது. பண் டிகை வாழ்த்துக்களை பயன் உள்ளதாக மாற்றுங்கள். நண் பர்களுக்கு வாழ்த்துக்கூறுவ தோடு அறிவூட்டும் கருத்துக் களையும் ஓராண்டுக்கு அளிக்க லாம். ஆண்டுச்சந்தா 50ரூபா. தனிப்பிரதி 8 ரூபா. தொடர் பிற்கு: நந்சமூக நடுநிலையம், 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப் பாணம்:

(சி 4167)

### வகுப்பு

German Language Classes பட்டப்படிப்புக்களைத்தொடர் வதற்கு உதவும் முகமாக மேற்படி வகுப்புகள் 10-12-90 இல் ஆரம்பமாகின்றன. தொடர்புகொள்க; S Sornalingam, Secretary, German Cultural Association, 4, Gopal Lane. Vannarponnai. (மனோகரா தியேட்டர் அருகில்)

(சி- 4168)

### வாங்கப்படும்

பழைய செம்பு, அலுமினி யம், பித்தளை, இரும்பு, போத்தல் ஆகியன வாங்கப் படும். விற்பனைக்கும் உண்டு. ராஜ் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ், 241, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வெலிங் டன் - ஸ்ரீதர் இடையில்)

(சி-4173)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## இராசி பலன்

09-12-1990

ஞாயிற்றுக்கிழமை

அட்டமி பி.இ. 1-15 வரை; பூரம் மு. இ 7-57 வரை; சித் தாமிர்த யோகம்; இராகு காலம் 4-48 முதல் 6-18 வரை நல்ல நேரம் 9-18 முதல் 10-48 வரை.

மேடம்: எதிர்பாராத துன் பம், பொருள் தவறுதல், தொழில் பாதிப்பு, கருத்து மோதல், கவலை மிகுதி;

இடபம்: குடும்பத்தில் சச்சரவு, பணக்கஷ்டம், தொழில் கஷ்டம், சகோதரபகை.

மிதுனம்: கடமையுணர்வு, தொழில் லாபம், குடும்ப மகிழ்ச்சி, புதிய ஸ்தானம்.

கடகம்: அந்நியர் சகாயம், தொழில் பிணக்கு, சென்ற இடத்தில் பிரச்சனை; குடும்ப அமைதியின்மை;

சிங்கம்: காரிய பலிதம், சொத்து தகராறு, வஸ்திர லாபம், மன நிறைவு; ஆலய தரிசனம்:

கன்னி: தொழில் நஷ்டம், அகால போஜனம், கடன் படல், குடும்பிரிவு, மனச்சுமை.

துலாம்: பயணங்களால் நன்மை, வேண்டியது கிட்டல், பொதுத்துறைஆர்வம், குடும்ப மகிழ்ச்சி.

விருச்சிகம்: தொழில் பாதிப்பு. கருத்து மோதல், அலைச்சல் மிகுதி, சகோதரர் துன்பம்.

தனுசு; வேண்டாத உறவு, தொழில் கஷ்டம், சென்ற இடத்தில் செலவு, குடும்பவிவ காரம்,

மகரம்: விபத்துக்குள்ளாகு தல், தொழில்மாற்றம், குடும் பச் சச்சரவு; சகோதரர் பிணக்கு.

கும்பம்: காரிய வெற்றி, மனை மாற்றம், வேண்டியவை அடைதல், தனவரவு.

மீனம்; தொழில் சிறப்பு, அதிகாரிகள் பாராட்டு, குடும்ப சந்தோசம். புத்திரர் புகழ், பெருமை.

ஜோஸ்யர்.

## திருமலையில் ராணுவ நடவடிக்கையால் 8633 குடும்பம் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

திருமலை மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நட வடிக்கையால் 8633 குடும்பங் கள் தமது இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்துள்ள னர்:

இவ்வாறு இடம்பெயர்ந்த வர்கள் முல்லைத்தீவு, யாழ்ப் பாண மாவட்டங்களில் தஞ்ச மடைந்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் 6248 குடும்பங்களும், முல்லை மாவ ட்டத்தில் 2385 குடும்பங்க ளும் தஞ்சமடைந்துள்ளனர்.

இரு மாவட்டங்களிலுமுள்ள தனியார் வீடுகளிலும், ஆல யங்கள், பாடசாலைகளிலும் இந்த அகதிகள் தற்போது வசித்து வருகிறார்கள்:

இவர்கள் வன்னிமாவட்டத் தில் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுவருகின்றனர். (சி)

## பெண்கள் ஆண்டு

(மாலே)

தென்கிழக்காசிய ஒத்துழை ப்பு நாடுகள் (சார்க்) அடுத் தாண்டு முதல் 10 ஆண்டுக் காலத்தைப் பெண்கள் ஆண் டாகப் பிரகடனப்படுத்தியுள் ளன.

இந்த 10 ஆண்டுகளில் உல கம் முழுவதும் பெண்களின் நலன்களைப் பேணி, மேலும் உரிமைகளைப் பெற இது உத வியாக இருக்குமெனத் தென் கிழக்காசிய ஒத்துழைப்பு நாடு களின் செயலர் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள் ளார். (ச)

## 400 கோடீஸ்வரர்கள்

உலகில் வாழும் 400 கோடீஸ்வரர்களின் வாழ்க்கை வரலாறு பற்றி ஒரு நூல் பிரிட்ட னில் வெளியாகியுள்ளது. இப்பணக்காரர்களில் அதிக ஆஸ்தி உள்ளவர்ள பிரிட்டிஷ் மகாராணி ஆவர்; இவருக்கு 650 கோடி பவுண் சொத்துக் கள் உண்டு.

இக்கோடீஸ்வரர்களுக்கு உலகம் முழுவதும் 45 லட் சம் ஏக்கர் காணி சொந்த மாக உள்ளது. இது சிறிய ஒரு நாட்டின் பரப் பளவுக்குச் சமமானதா கும்: இவர்களில் பலர் பரம்பரைப் பணக்காரர் கள். மற்றவர்கள் உழைப்பால் கோடீஸ் வரர்களாக உயர்ந்தவர் கள். (ச)

## எர்ஷாத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்

(டாக்கா)

பங்களாதேஷ் அதிபர் எஷாத் உட்பட முக்கிய பிரமு கர்களுக்கு எதிராக சட்ட நட வடிக்கை எடுக்கப்பட வேண் டும் என்று தேசிய அவாமீக் கட்சி நேற்று வெளியிட்ட அறிக்கையில் கோரியுள்ளது.

இவர்கள் புரிந்த முறை கேடான செயல்களுக்கு. தண் டனையின்றித் தப்பக்கூடாது என்று பங்களாதேஷ் தேசிய கட்சி உட்பட முக்கிய கட்சி கள் கருத்து வெளியிட்டுள் ளன. (கு-ரி)

## விண்வெளியில் சுற்றும் 'சோயுஸ்', 'கொலம்பியா'

(லண்டன்)

சோவியத்யூனியனின் ''சோயுஸ்'' விண்கலத்திலும் அமெரிக்காவின் 'கொலம் பியா' விண் ஓடத்திலும், பன்னிரெண்டுபேர் விண்ணை வலம்வந்து கொண்டிருக்கி றார்கள்.

இவர்களில் கொலம்பியா விண்கோளில் பயணம் செய்ப வர்களில் ஒருவர் ஐம்பத் தொன்பது வயதுடைய வான்ஸ்பரலண்ட் என்னும் விஞ்ஞானியாகும். சோயுஸ் விண்கலத்தில் பயணம் செய் யும் யப்பானிய பத்திரிகை யாளர் ரொகிஹேறா அக்கி யூட்டோ இருபது கோடி ரூபாய் பணம் செலுத்தி விண் வெளிப்பயணத்தை மேற் கொண்டுள்ளார்.

இவர் முன்னர் பி. பி. ஸி செய்தி முகவராகப் பணிபுரிந் தவர்.

தற்போது இவர் யப்பானிய ரி. வி. எஸ்' தொலைக்காட்சி நிலையத்தில் பணிபுரிகிறார். இவரது விண்வெளிப்பயணத் திற்கான, முழுச்செலவும் ஒன்பது தொலைக்காட்சிப் பெட்டி உற்பத்தி நிறுவனங் கள் வழங்கியுள்ளன.

இத்தொகையை இந்நிறுவ னங்கள் விண்வெளியில் இருந்து இந்நிறுவனங்கள் பற்றி விளம்பரம் செய்வதற் காக செலவு செய்துள்ளன. இவர்களுடன் ஏழு தவளை களும் விண்வெளியில் சஞ்சா ரம் செய்கின்றன. விண் வெளியின் அனுபவங்களை நாளை அல்லது நாளை மறு தினம் பத்திரிகையாளர்கள் விண்வெளியில் இருந்து தெரி விப்பர். (ச)

## ஜனதாதள் குஜராத் கிளை கலைப்பு

(புதுடில்லி)

ஜனதாதள் குஜராத் மாநி லக் கிளை நேற்று முன்தினம் கலைக்கப்பட்டதாக அதன் தலைவர் திரு. எஸ் ஆர். பொம்மை புதுடில்லியில் தெரி வித்தார். (க)

## தொண்டர் ஆசிரியர் ஆணைக்குழுவின் பதில் வந்தபின்பே முடிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர ஆசிரியர்களாக்கும் நேர்முகப் பரீட்சை தொடர் பாகக் கல்விச சேவை ஆணைக் குழுத்தலைவருடன் யாழ். மாவ ட்ட கல்விப்பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் அண் மையில் வானொலி தொடர்பு மூலம் தொடர்புகொண்டார்.

கல்விச்சேவை ஆணைக்குழுத் தலைவரின் பதில் வந்த பின் னரே நேர்முகப் பரீட்சையா அல்லது எழுத்துப் பரீட்சையா என்பது தீர்மானிக்கப்படு மெனவும் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (153)

## விடுதலைப்போரில் பங்களித்த தேசபக்தர்களை நாம் நினைவுகூர வேண்டும்

(காங்கேசன்துறை)

''தமிழின விடுதலைப் போரில் பல்வேறு வகைகளில் பங்களிப்புச்செய்து தமது உயிரை துச்சமாக மதித்து செயல்பட்ட தேச பக்தர்களை நாம் நினைவு கூரவேண்டும். அவர்கள் கண்ட கனவு நன வாக நீண்டகாலம் செல் லாது''.

இவ்வாறு மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற தியாகி கருணா னந்தசிவம் நினைவுதினவிழா வில் கலந்துகொண்டு உரை யாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணியைச் சேர்ந்த அருள் மாஸ்டர் கூறினார்;

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச்சங்க ஆதரவில் சங்கத் தலைவர் திரு. எஸ், சிவமகாராஜா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது-

''இன்று நாம் போராட் டத்தின் உச்சக்கட்டத்திலே நிற்கிறோம். இப் போராட் டத்திலே தமது உயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களை அண்மையில் நினைவுகூர்ந் தோம்; இதுபோன்று தேசபக்தர்களையும் நாம் நினைவுகூர்ந்து அவர் பணிகளை போற்றவேண்டும்;

''எமது விடுதலைப் போரில் கூட்டுறவு இயக்கத்தின் பங் களிப்பும் தேசபக்தர்களின் பங்களிப்பும் இன்றியமையாத வைகளாக விளங்குகின்றன. கூட்டுறவாளர்களாகவும் தேச பக்தராகவும் விளங்கி ஏனை யோருக்கு வழிகாட்டியாக விளங்கிய தியாகி கருணா னந்தசிவத்தின் இழப்பு எமக்கு பேரிழப்பாகும்-

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கூட்டுறவு பொறுப் பாளர் திரு. மகாதேவன், நல்லூர் உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம், கல்வி அலுவலர் திரு: சி. வேலா யுதம் தேசிய கூட்டுறவுச் சபை செயலாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் உட்படப் பலர் உரையாற்றினர்கள்:

(89)

## ஓய்வூதியம் வழங்கப்பட்டது

(புலோலி)

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் கடந்த 6 மாத இடைவெளிக்குப் பின் னர் ஓய்வூதியர்களுக்கு ஓய் வூதியம் வழங்கப்படுகிறது.

கடந்த 4ம் திகதி முதல் 7ந் திகதி வரை ஒரு நாளைக்கு 100 பேருக்குத் தலா 1000 ரூபா வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டது. (61)

## கல்முனை ஊழியருக்கு சம்பளம் இடைக்கவில்லை

(கொழும்புத்துறை)

கல்முனை நில அளவைத் திணைக்களத்தில் கடமை புரி யும் ஊழியர்கள் கடந்த ஆறுமாதகாலமாக எவ்வித சம்பளக் கொடுப்பனவுகளும் இதுவரை தமக்கு வழங்கப் படவில்லை எனக்கவலை தெரி வித்துள்ளனர்.

இது விடயமாகப் பல தட வைகள் கொழும்பில் இயங் கும் தலைமைக் காரியால யத்துடன் தொடர்புகொண்டு ஆவன செய்யுமாறு மேற்படி ஊழியர்கள் உயர் அதிகாரி களைக் கேட்டும் இதுவரையும் பலன் எதுவும் கிடைக்கவில்லை

கடந்த ஆறு மாதங்களாக வேதனம் இன்றிப்பலத்த சிர மத்தின் மத்தியில் இவர்கள் தமது வாழ்க்கையை நடாத்து வதாக அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் தெரிவித்துள்ள னர். (154)


மீண்டும் பழைய இடத்தில்

றேடியோஸ்பதி

158, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

(ஏ-921)


## ஆங்கில ஆசிரியர் சேவைக்கால பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வேலணை கல்விக் கோட் டத்தைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியர்களுக்கு ஆங்கில ஆசி ரியர் சேவைக்காலப் பயிற்சி இம்மாதம் 13ந் திகதி வேலணை சேர் வைத்திலிங்கம் துரை சாமி ம. ம. வித்தியாலயத் தில் நடைபெருவிருக்கிறது.

(153)

## அல்லற்படும் அகதிகள்

எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம் தலையில்லாமல் வால் மட்டும் ஆடி பலனேதுமில்லை. இவை அர்த்தமுள்ள பழமொழிகள்;

ஸ்ரீலங்கா என்ற அரசின் தலைக்கு நிகராக, யாழ். குடாநாடு அமைந்துள்ளது என புவியியலாளர் கூறுவதுண்டு.

தனது உடம்புடன் ஒத்துப்போகும் தலையாக யாழ். குடாநாடு அமையவில்லையே? என்ற ஆதங்கத்தில் ஆனையிறவு கடவை என்ற கழுத்தை நெரித்து தலையையும் கொய்து உயிர்வாழ நினைப்பது போல அரசாங்கத்தின். அண்மைக்கால அனைத்து நடவடிக்கைகளும் புத்திகெட்டு தரம் குறைந்து போய் விட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணத்தையே முழுமையான அகதி முகாமாகவும், அதர்ம யுத்தகளமாகவும், மாற்றிவிட்டு நாட்டில் 10 லட்சம் அகதிகள் உள்ளதாக உத்தியோகபூர்வமாக அங்கீகரித்துள்ள புனர்வாழ்வு புனர்நிர்மாணத்துறை அமைச்சர் திரு. எஸ். எம். அதிகாரி இவ் அகதிகளை பாகுபாடுளதுவுமின்றி பராமரிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள விருந்ததாக அவர் மேலும் கூறுவது [வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவது போல் உள்ளது.

இதுவரையில், வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள அகதிகள் முகாம்களை அரசாங்கம் பராமரிக்கும் பக்குவம் ஊர் அறிந்த விடயம்! அகதிகள் முகாம்களில் தஞ்சம் புகுந்த தமிழ் மக்களை இராணுவம்விரட்டியடித்தும், அங்குள்ள தமிழ் இளைஞர்களை தேடுதல் வேட்டையின் போது கைது செய்து மர்மமாக மறைத்தும், மீதமான மக்களின் பட்டினிச்சாவும் சுகாதார சீர்கேடுகளும் உலகறிந்த உண்மைகளாகும்!

இந்த லட்சணத்தில் லட்சோப லட்ச அகதிகளைப் பாகுபாடு இன்றி பராமரிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக உலகுக்கு பறைசாற்றி அகதிகளின் பெயரைச் சொல்லியே வெளிநாட்டு கடன்பெற்று, தமிழினத்தையே முற்றாக அழிக்க புனர்வாழ்வு அமைச்சர் புதிர் போடுகின்றார் போலும்!

கடந்த நாற்பது ஆண்டு காலமாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் யாழ், குடாநாடு என்ற தலையையே குழப்பி தன் உடலையே நாசமோசப் படுத்தியதால் நடுத்தெருவில் நிற்கும் இன்றைய இலங்கை அரசுக்கு தலையில்லாமல் உடலியங்காது என்ற அற்ப உண்மையே புரியவில்லை போலும்.

எத்தகைய சூழ்நிலையிலும் மூளை குழம்பாது மதி நுட்பத்திறனுடனும் உடல் வலுவுடனும், தமிழினத்தின் தன்மானத்தையும் காத்து தலை நிமிர்ந்து நிற்கும் தமிழ்த்தாய் தனக்குரித்தான வரலாற்று ரீதியான வடக்கு-கிழக்கு மாகாணம் என்ற புகழ்பூத்த உடம்புடன் தொடர்ந்தும் உயிர்வாழ்வாள் என்பது திண்ணம்!

— மயூரன்

# கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய பீடம் உதயம்!

(கே. வி. கே. திருலோகமூர்த்தி)

வடக்கின் பிரதான நெற்களஞ்சியமும் தனிச் சிறப்பு மிக்க தனிமாவட்டமுமான கிளிநொச்சியில் யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம் உபவேந்தர் திரு. துரைராசாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டதன் மூலம் வன்னி மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் மத்தியில் புதிய உத்வேகம் உதயமாகியுள்ளது;

கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்க திட்டமிட்ட விவசாயபீடம் காலம் கடந்தாலும் தக்க தருணத்தில் திறக்கப்பட்டதையும் இந்த விவசாயப் பல்கலைக்கழகத்தின் தனித்துவம் முக்கியத்துவம் உயர்வாக உள்ளதையும் கடந்த 3ம் திகதி இடம்பெற்ற ஆரம்ப விழாவில் கலந்துகொண்டு கருத்துரையாற்றிய பல அறிஞர்களும் அரச அதிகாரிகளும் தெட்டத்தெளிவாக எடுத்துஇயம்பியுள்ளதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்?

முன்னைநாள் உபவேந்தர் அமரர் வித்தியானந்தன், தற்போதைய உபவேந்தர் திரு. துரைராசா முதலானோரின் விடாமுயற்சியின் பயனாக இந்த விவசாயபீடம் அரச அதிபர் கே. மாணிக்கவாசகரின் பெரும் ஆதரவுடன் விவசாயிகளதும் நலன் விரும்பிகளதும் பெருமனதான ஒத்துழைப்பாலும் விவசாயபீடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### 6 திணைக்களங்கள்

ருகுணு, மட்டக்களப்பு முதலான இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் பல திணைக்களங்கள் இன்னமும் உருவாகவில்லை. இதே வேளை இந்தப் பல்கலைக்கழகங்களில் இல்லாதவகையில் கிளிநொச்சி விவசாய பீடத்தில் ஆறு திணைக்களங்கள் உருவாக்கப்பட்டுள்ளதும் இதில் ஐந்து திணைக்களத் தலைவர்கள் பதவி ஏற்றுள்ளதும் குறிப்பிட்டதாகும்.

இதன் பீடாதிபதியாக கலாநிதி கந்தையா பொறுப்பேற்றுள்ளதுடன் சுறுசுறுப்பாக பணியாற்றி வருவதையும் காண முடிந்தது. இப் பல்கலைக்கழக வளர்ச்சிக்காகப் பொதுமக்கள், விவசாயிகள், நலன் விரும்பிகள் கொண்ட நலன் விரும்பிகள் சங்கம் ஒன்றும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது: இச்சங்கத் தலைவராக கலாநிதி மோகனதாஸ் தெரிவாகியுள்ளார்.

### பறவைகள் விலங்குகள்

இப்பீடத்திற்கு விலங்கு வேளாண் துறைக்கு மயில் போன்ற பறவை இனங்களும் சிலவகை விலங்குகளும் தேவை எனவும், இதைப் பொதுமக்கள் தந்துதவுமாறு கலாநிதி மோகனதாஸ் வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளார்.

### 20 மாணவர்கள்

விவசாய பீடத்திற்கான கட்டிட வேலை பூர்த்தியாகாத நிலையில் இரணமடுச் சந்தியில் உள்ள விவசாய சேவைக்கால பயிற்சி நிலையத்தில் இப்பீடம் ஆரம்பமாகியுள்ளது. தற்போது இங்கு கல்வி பயில 20 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

இந்த மாணவர்கள் முற்றிலும் மாறுபட்ட பல்கலைக்கழகச் சூழலில், பல வசதியீனங்களின் மத்தியில்தான் தமது கல்வியைத் தொடங்கப் போகின்றனர்.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத் தலைவர் கலாநிதி கணேசலிங்கம் குறிப்பிட்டது போல் விவசாயப் பீடம் விரைவாக வளர்ச்சி பெற்று, 5 ஆண்டுகளில் தனிப் பல்கலைக்கழகமாக மாறும் சாத்தியக்கூறும் இங்கு பொறுப்பேற்றுள்ள துறைசார்ந்த தலைவர்களின் உற்சாகமான செயற்பாட்டில் இருந்து தெளிவாகிறது.

எது எப்படி இருந்தபோதிலும் முற்றும் முழுதான விவசாய மாவட்டத்தில் விவசாய பீடம் அமைந்துள்ளது மிகவும் பொருத்தமான செயலாகும். (83)

## கோட்டை வீழ்ந்தது!

சத்தம் கேட்குது: சகடை வருகுது
சாமத்திலும்குண்டு போடுது
சொத்து அழிந்தது; சொந்தம் மடிந்தது
சோகமே எங்கும் ஆட்சி புரிந்தது.
பித்துப்பிடித்து பேய் போலாயினர்;
பேரழிவினால், வாழ்வை யிழந்தனர்.
நித்தம் நடந்த வானத் தாக்குதல்
நின்றுவிட்டது, கோட்டை அழிந்ததால்

★ ★ ★

பொழுது விடிந்ததும். பொம்மர் வந்தது
போட்டது குண்டு; வீடுகள் வீழ்ந்தது
அழுது துடித்தனர். அனாதைகளாயினர்
அகதிகளாக தெருவிலே வாடினர்;
தொழுதனர் அனுதினம் துக்கம்மேலிட
துதித்தனர் கோவில்கள் சென்று;
எழுந்தனர், இன்று குழிகளைவிட்டு
எங்கும் குதூகலம், கோட்டை சரிந்ததால்.

★ ★ ★

அங்கே வானத்தில் அவ்ரோ வருகுது
அடிக்குது வட்டமிகள் நகர்மீது
எங்கே போடுது: என்ன போடுது
எவருக்கும் விசயம் புரியாது
பங்கரில் மக்கள் பகலிரவாக
பதுங்கித் தவித்து வாழ்ந்தனர்
சங்கதி கேட்டின்று சந்தியில் கூடி
சிந்தை மகிழ்ந்தனர் கோட்டை இடிந்ததால்

★ ★ ★

ஹெலி தினம் வந்து நகர் மீதுசுட்டு
கதியற்ற மக்கள் வெளியேற
பலியாகி வீழ்ந்தனர்; பல நூறுபேர்
படுகாய முற்றதும் உண்டு
புலிகள் எழுந்து புயலென பாய்ந்திட
போர்களம் விட்டு, படையினர் ஓடினர்
திலீபனின் திருநாளில் திரளான மக்கள்
தெருவுக்கு வந்தனர் கோட்டை
வீழ்ந்ததால்

- ஊரோடி

# மன்னாரில் 750 குடும்பங்கள் அகதிகளாகியுள்ளார்கள்

(மன்னார்)

மன்னார் தீவிலுள்ள பட்டித்தோட்டத்திலுள்ள சனிவிலேஜ் அகதிமுகாமில் 250 குடும்பங்கள் அகதிகளாக இருக்கிறார்கள்;

வங்காலை, தாழ்வுப்பாடு, மன்னார் பட்டினத்தைச் சேர்ந்த மக்களே மேற்படி அகதி முகாமில் இருக்கிறார்கள்.

பேசாலை கடற்றொழில் கூட்டுத்தாபன கட்டிடத்திலுள்ள அகதிமுகாமில் தலைமன்னார் மேற்கு, தோட்டவெளி. கரிசல் ஆகிய இடங்களைச் சேர்ந்த 500 குடும்பங்கள் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

# காங்கேசன்துறையிலுள்ள 11 பாடசாலைகளை இயங்க செய்வதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கை காரணமாக இயங்கமுடியாத நிலையில் உள்ள காங்கேசன்துறைக் கொத்தணியைச் (153-ரி சேர்ந்த பதினொரு பாடசாலைகளும் இயங்குவதற்கான மாற்றொழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இதன்பிரகாரம் யா/நடேஸ்வரக்கல்லூரி யா/சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும், யா/நடேஸ்வரக்கனிஷ்ட வித்தியாலயம் யா/சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும், யா/மயிலிட்டி றோ. க. வித்தியாலயம் யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயத்திலும், யா/ஊறணி கனிஷ்ட வித்தியாலயம் யா/இளவாலை றோ. க. வித்தியாலயத்திலும், யா/காங்கேசன்துறை றோ. க. வித்தியாலயம் யா/மல்லாகம் குளமங்கால் வித்தியாலயத்திலும், யா/பலாலி சித்திவிநாயகர் வித்தியாலம் யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்திலும். யா/மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயம் யா/மல்லாகம் திருஞான சம்பந்தர் வித்தியாதிலும். யா/பலாலி வடக்கு அ. த. க. பாடசாலை யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்திலும், யா/ஊறணி கணேச வித்தியாலயம் யா/இணுவில் சைவமகாஜன வித்தியாலயத்திலும், யா/காங்கேசன்துறை மகாவித்தியாலயம் யா/மல்லாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்திலும், யா/சிவகுருநாதவித்தியாலயம் சண்டிலிப்பாயிலும் இயங்கவுள்ளன.

பிற்பகல் 1 மணி முதல் இயங்கவுள்ள இப்பாடசாலைகளுக்கு இதுவரையும் சமுகமளிக்காத மாணவர்களையும், ஆசிரியர்களையும் சமுகமளிக்குமாறு கொத்தணி அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்

# பெண்களே பங்களாதேஷில் ஜனநாயகத்தைக் காப்பாற்றினர்!!

பங்களாதேஷில் நீண்டகாலமாக நடைபெற்ற ஜனநாயக மீட்பு போராட்டம் மக்களின் தொடர்ச்சியான போராட்டத்தினால் வெற்றி பெற்றுள்ளது, ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் வீதிக்கு வந்து போராட்டம் நடாத்தியதனால் இப்போராட்டம் வெற்றி பெற்றுள்ளது.

இப்போராட்டத்தை வெற்றிபெற முன்னெடுத்துச் சென்றவர்கள், பங்களாதேஷ்ன் விடுதலைக்கு வித்திட்ட முஜிபூர் ரகுமானின் மகள் அவாமிலீக் கட்சியின் தலைவியுமான ஜனாப் ஷேக் அஸீனா அம்மையாரும், பங்களாதேஷ் முன்னவித்தலைவியுமான ஜனுமா பேகம் ஹயும் அம்மையாருமாவார்; பங்களாதேஷ் மக்கள் அரசியல் ஞானம் குறைந்தவர்கள்: அவர்களிடம் எதிர்க்கட்சிகளை ஆதரிக்கிறீர்கள் எனக்கேட்டால் இராணுவத்தை ஆதரிப்பதாக இன்றும் சிலமக்கள் கூறிவரும் வேளையில் மக்கள் சக்தியை ஜனநாயகத்திற்காக ஒன்று திரட்டி பாரிய வெற்றியை இருபெண்களும் ஏற்படுத்தியுள்ளனர்.

ஒன்பது ஆண்டுகளாக இராணுவத்தை நம்பியே ஆட்சி செய்துவந்த எர்ஸாட்டிற்கு இராணுவம் மக்கள் கோரிக்கைக்கு மதிப்பளித்து நடவடிக்கை எடுக்க தவறியதனால் ஏஸாட் பதவி விலகினார்;

### ஸச்சி

எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்கு அமைவாக உபஜனாதிபதியாக தேர்தல் நடைபெறும்வரை பங்களாதேஷின் உயர்நீதி மன்ற நீதிபதி சஹாப்தீன் அகமதுவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷில் அரசுகலைக்கப்பட்டாலும் இன்றையநிலையில் அங்கு பெரும் அரசியல் பணிகளை இரண்டு அரசியல் தலைவர்களும் மேற்கொள்ள வேண்டிய கட்டாய நிலை இருந்து வருகின்றது. மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும். மக்கள் பழையபடி நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த கடின உழைப்பை வழங்க வேண்டும் இராணுவத்தை மக்கள் நலன்களைப் பேணும் அமைப்பாகவும். நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்தவும் மாற்றியமைக்க வேண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த சகலரும் ஒத்துழைக்குமாறு வேண்டுகோள் விடுக்க வேண்டும். இப்பணிகள் சீராக நடைபெற்றால் தான் பங்களாதேஷ் மீண்டும் தலைநிமிர்ந்து நிற்கும்;

இக்கடினமான பணிகளில் இருபெண்களும் வெற்றி பெற்றால் ஜனவரியில் நடைபெறப்போகும் பொதுத்தேர்தலில் ஆட்சிப் பொறுப்பை இப்பெண்களே கைப்பற்றும் சாத்தியக்கூறு உண்டு. (ச)

# வடக்கு - கிழக்கு மக்களுக்கு சர்வதேச உதவி கிடைப்பதில்லை

## - தென்னிந்திய திருச்சபை கவலை -

(யாழ்ப்பாணம்)

''சர்வதேசக் குழுக்களின் பங்களிப்பு வடக்கு - கிழக்கு மக்களுக்கு சரியாகக் கிடைக்காததினால் அப்பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.''

இவ்வாறு அண்மையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு நேரில் விஜயம்செய்து தற்போதைய நிலைமைகளை கண்டறிந்த தென்னிந்திய திருச்சபை குழுவின் நிர்வாக இயக்குநர் வண. ஜேக்கப் பெலி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: ''உள்நாட்டுப் போர் நடைபெறும் இக்கால கட்டத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்ப் பொதுமக்கள் சொல்லொணு துன்பங்களை அனுபவித்துவருகின்றார்கள். இவர்களுக்கு சர்வதேசக்குழுக்களின் உதவிகள் சரியாகக் கிடைக்காமல் இருப்பதைக்காணக்கூடியதாக இருக்கிறது.

கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மக்கள் பெரும்பாலும் காடுகளிலும், அகதிகள் முகாம்களிலும்பயந்து ஒழிந்து வாழ்கின்றார்கள். இவர்கள் சரியான நேரத்தில் உணவு, வைத்திய வசதிகளின்றி கஷ்டப்படுவதையும், தொற்று நோய்களினால் குழந்தைகள் தினமும் அங்கு செத்துமடிவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்குஉடனடியாகவேண்டிய மருந்துவகைகள் இருப்பதாகத் தெரியவில்லை.

குறிப்பாக வடமராட்சிப் பகுதிகளிலுள்ள மக்கள் எதுவித நிவாரண உதவிகளும் சரியாகக் கிடைக்காமல் மிகவும் துன்பப்பட்டு வருவதையும் தாம் கண்டதாகக் கூறினார். (வி)

## மிதிவெடியில் சிக்கி இராணுவம் பலி ஒருவர் காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

கும்புறுப்பிட்டியில் விடுதலை புலிகள் வைத்த மிதிவெடியில் சிக்கிய இராணுவத்தினரில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றைய இராணுவத்தினர் காலை இழந்தார்.

கடந்த 6ம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றது. இதே வேளையில் 6ம் திகதி ஆரையம்பதியை சேர்ந்த செபமாலை (45-வயது) என்பவரைரெலோ இயக்கத்தினர் சுட்டுக்கொன்றனர். (ள)

## கிரிக்கெட் இலங்கை வெற்றி

(புதுடில்லி)

இந்திய-இலங்கை அணிகளுக்கிடையில் ஜோவா பனர்ஜியில் இடம்பெற்ற 3-வது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 40.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரெண்டுல்கார் 30 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்து ஆடிய இலங்கை அணி 32.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது. அரவிந்த டி சில்வா ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களையும், அர்ச்சுனரணதுங்கா ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

3 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இந்தியா 2-1 என வெற்றிபெற்றுள்ளது. (சி)

## வவுனியாவில் ஊரடங்குச் சட்டம் நீக்கம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்பட்டிருந்த காலவரையற்ற ஊரடங்குச் சட்டம் நேற்றுக்காலை முதல் நீக்கப்பட்டதாக இராணுவக் கூட்டுப்பணியகம் அறிவித்துள்ளது. (எஸ்-ரி)

## மிதிவெடியில் சிக்கி பலி

(மாங்குளம்)

மாங்குளம் இராணுவத்தினர் வைத்த மிதி வெடியில் சிக்கி தமது ஒரு காலை இழந்த ஒருவர் சில தினங்களின் பின் மரணமானார்,

அ. ஆறுமுகம் (வயது 42) என்பவரே தமது ஒரு காலை இழந்து பின் மரணமானவராவார்; மாங்குளத்தைச் சேர்ந்தவர்,

## விமான தாக்குதல்

(மன்னார்)

மன்னார் நானாட்டான் பகுதியில் இலங்கை விமானங்கள் நேற்றுநடத்திய குண்டுத் தாக்குதலில் பாடசாலை மாணவன் ஒருவர் படுகாயமடைந்தார். அம்பாள் ஆலயம் முற்றாக சேதமடைந்தது.

இதேவேளையில் கிளிநொச்சி புளியம் பொக்கணையில்நேற்று நடைபெற்ற விமானத்தாக்குதலில் இரு வீடுகள் பலத்த சேதமடைந்தன. பல கால் நடைகளும் இறந்துள்ளன. (வி)

## கறுப்புப் பணத்தை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் பெற்றுக் கொண்ட உதவிகள் போதுமானவையாக இல்லையென்பதால் பொதுச் சேமிப்புக்களில் இருந்தும் கடன் பெறுவதே ஒரே வழியென அரசு கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (150)

## சீனப் பிரதமர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இதன் ஒரு நடவடிக்கையாகஇலங்கைக்கான இந்திய தூதுவர் திரு. என். எம். ஜா அவசரமாக புதுடில்லிக்கு அழைக்கப்பட்டுள்ளார். இந்தியா தமிழர் பிரச்சினையில் புதிதாக அக்கறையும் காட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது (சி)

## தமிழக அரசை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாக கூறப்படுவது பிழையானது.

இலங்கை கேட்டதற்கிணங்கவே இந்தியப் படைகள் அங்கிருந்து வாபஸ் பெறப்பட்டது. இலங்கையில் தமிழருக்கு உரிய அதிகாரப் பகிர்வு கிடைக்க இந்திய அரசு முயல வேண்டும் என்றார். (சி)

## இளவாலையில் 479 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை

(பண்டத்தரிப்பு)

இளவாலைப் பகுதியைச் சேர்ந்த 479 குடும்பங்களுக்கு 4ம் கட்ட இலவச உலர் உணவு பங்கீட்டு அட்டைகள் இது வரை வழங்கப்படாததினால் அவர்கள் இந்த நிவாரணப் பொருட்களைப் பெறமுடியாது திண்டாடுவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 12வது இலக்க இளவாலைக் கிளையில் இந்த உலர் உணவுப் பொருட்கள் விநியோகத்திற்கான உணவுப்பொருட்கள் கையிருப்பில் இருந்தும் இக்குடும்பங்களுக்கு கிராமசேவை அலுவலரினால் பங்கீட்டு அட்டைகள் இதுவரை வழங்கப்படாததினால் அவர்கள் இதனைப் பெற முடியாது மிகவும் சிரமப்படுவதாக மேற்படி கிளைக்குழுத் தலைவர் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். இப் பங்கீட்டு அட்டைகள் வழங்கப்படாதிருப்பது குறித்து சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கு புகார்செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## பலாத்காரத்தின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவங்கள் பற்றி மேலும் தெரியவருவதாவது: மட்டுநகரில் இரவு நேரங்களில் ரெலோ இயக்கத்தினர் தமிழ் பெண்களை துன்புறுத்தும் செயல்களில் ஈடுபடுவதாகவும் இப்பகுதியில் உள்ள கல்லடியில் 18 வயதான நல்லதம்பி அனுசியா என்ற இளம்பெண்ணை பாலியல்வன்முறையில் ஈடுபடுத்தியபின்பு அவரின் கழுத்தை நெரித்து கொலைசெய்துவிட்டு மட்டுநகர் வாவியில் வீசியுள்ளனர்.

இதேபோன்று மூதூரிலுள்ள சம்பூரில் இரண்டுபிள்ளைகளின் தாயாரான திருமதிமோகன சுந்தரம் [மலர்] வயது 27 என்பவரை இராணுவம் பாலியல் வன்முறையில் ஈடுபடுத்தியதாகவும் கூறப்படுகின்றது. (வி)

## பெண்ணிற்கு மரண'தண்டனை

(மன்னார்)

பேசாலையைச் சேர்ந்த அன்னபூரணி (ஹெலன்) (வயது 29) என்றபெண்ணுக்கு கடந்த 4-ம் திகதி இரவு விடுதலைப் புலிகளினால் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

இராணுவத்தினருடன் தகாத முறையில் தொடர்பு வைத்திருந்ததற்காகவும், உளவுவேலையில் ஈடுபட்டதற்காகவும் மேற்படி பெண்ணிற்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. [வி]

## வை. எம். சி. ஏ. உதவி

(பண்டத்தரிப்பு)

குவைத் நாட்டிலிருந்து அகதிகளாக திரும்பியவர்களுக்கு நிவாரண உதவிகளை பெற்றுக்கொடுப்பதற்கு பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. நடவடிக்கை எடுத்து வருகிறது.

## திருமலை பச்சைநூல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் சடலங்களை இராணுவம் வீதிகளில் வீசிவிட்டு சென்றதாம்.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் தமிழரிடையே பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் பெருமளவு தமிழர் அவ்விடத்திலிருந்து இடம் பெயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## வட-இந்திய மாநிலத்தில் இந்து-முஸ்லிம் கலவரம்

(புதுடில்லி)

இந்தியாவின் உத்தரபிரதேஷ் மாநிலத்தில் மீண்டும் இந்து-முஸ்லிம் கலவரம் சூடு பிடித்துள்ளது; நேற்று இடம் பெற்ற மோதல்களில் 15 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

ராமஜென்ம பூமி பாபரி மசூதி சர்ச்சை மூலமே இக்கலவரம் மீண்டும் எழுந்துள்ளது. ரயிலில்வந்த பயணிகள் நால்வர் வெளியே இழுக்கப்பட்டு உயிருடன் தீயிட்டு கொளுத்தப்பட்டனர்.

இதையடுத்து இம்மாநிலத்திற்கு இராணுவம் உடனடியாக அழைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் பெரும் பகுதிகளில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. (சி)

## வடபகுதி ஆசிரியர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்குமாறு வடக்கு கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கத்திடம் கேட்டுள்ளார்.

இக்கோரிக்கை சம்பந்தமான சுற்றுநிருபம் ஒன்றும் வடக்கு கிழக்கு மாகாணகல்வி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (139-ரி)

## மாணவர் உட்பட

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அனைவரும் ரயர் போடப்பட்டு உயிருடன் தீமூட்டி எரிக்கப்பட்டனர். இதையடுத்து இப்பகுதி முழுவதும் பெரும் பதற்றம் நிலவுகிறது. (வி)

## ஆறு தமிழர்கள்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

படுவதாவது; அம்பாறையில் உள்ள திருக்கோவில் பகுதியில் அதிரடிப்படையினர் ஆறு பொதுமக்களைக் கைதுசெய்து இருவரை அதேயிடத்தில் சுட்டுக் கொலை செய்துவிட்டு, அவர்களின் உடல்களை ரயர் போட்டு எரித்துவிட்டு மற்றைய நாலுபேரையும் முகாமுக்குக் கொண்டு சென்று தடுத்து வைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (வி)

## 1,536 சிங்கள

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகக்கூடுதலாக அம்பாறை மாவட்டத்தில் 1, 178 சிங்கள பயிலுநர் ஆசிரியர்களுக்கும், திருமலையில் 236 பேருக்கும், வவுனியாவில் 97 பேருக்கும் சிங்கள பயிலுநர் ஆசிரியர் நியமனங்கள்வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, கிளிநொச்சி மாவட்டங்களில் தலா 3பேருக்கும், மன்னாரில் 2பேருக்கும் பயிலுநர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (153)

## இப்படியும் ஒரு மோசடி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சந்தைகளில் டீசல் விற்பனை செய்வதில் ஒரு சாதனையை டீசல் விற்பனையாளர் நடைமுறைப் படுத்திவருவதாக தெரியவருகிறது. முன்னர் ருன்ஸ்போமர் ஒயிலையும் மண்ணெண்ணெய்யும் கலந்து டீசல் என விற்பனை செய்தவர்கள் இப்போது உண்மையான டீசல் ஏன் நுரைக்கவில்லையென வாகன சொந்தக்காரர்கள் கேட்டால் இப்போது நன்றாக நுரைக்கவும் வழி கண்டுபிடித்துவிட்டார்கள்.

அவர்கள் இதற்குப் பாவிப்பது ''சம்போ'' இதனைக் கலந்துவிடுவதால் அள்ளி ஊற்றும் போது நன்றாக நுரைக்கிறது. (எஸ்)

## உலகத்தமிழர்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நாட்கள் நடைபெறும் இம் மாநாட்டில் உலகத்தமிழர் கல்விகற்கக்கூடிய வகையில் பல்கலைக்கழகம் அமைக்கும் சாத்தியம் பற்றியும் மற்றும் உயர்கல்வித் தகைமையுடையவர்களுக்கு நிதியுதவி அளிக்கக்கூடிய வகையில் உலகத் தமிழர் வங்கி அமைப்பது பற்றியும்ஆராயப்படவுள்ளது.

சுமார் ஆயிரம் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக மாநாட்டு அமைப்பு செயலர் நேற்று தெரிவித்தார். (க)


## மரண அறிவித்தல்

### திரு. சோமசுந்தரம் நடேசு

(வேலணை)

வேலணை கிழக்கைச்சேர்ந்த சோமசுந்தரம் நடேசு (மகேந்திரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) காலமானார். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மகேந்திரன், (கருமாரி வீடியோ சென்ரர், யாழ்ப்பாணம்-வேலணை) இரவீந்திரன், நடேசகாந்தன், பவானி, இரத்தினவேணி, இரத்தினசிறி, இரத்தினரூபி, இரத்தினரதி ஆகியோரின் அன்புத்தந்தையாரும், சிவராசா, கிருஷ்ணபிள்ளை, ஜெயகாந்தன் (ஜெயா பான்சி ஹவுஸ், யாழ்ப்பாணம்) பேரின்பரதி, ராதா ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (9-12-90) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று வேலணை மேற்கு அம்பலவி மயானத்திற்கு தகனக்கிரிகைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை கிழக்கு,
வேலணை.
(சி 4174)

தகவல்:
ந. மகேந்திரன்
[மகன்]



இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு மார்கழி மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.